துணைக் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுவதில்லை. நான் ஏற்கெனவே 200 கேள்விகள் கொடுத்திருக்கிறேன். இதுவரையிலும் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.எஸ். விஜயகுமார், கேள்வியைமட்டும் கேளுங்கள்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: கையைப் பலமுறை தூக்கியும், எங்களுக்கு வாய்ப்புத் தரமாட்டேன் என்கிறீர்கள்!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 47, டாக்டர் க. நெடுஞ்செழியன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

47—

விளையாட்டுத் திடல்

***8938—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை ஒன்றியம், ஜமீன் எளம்பள்ளி ஊராட்சி, மாரப்பம்பாளையத்தில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கபிலர்மலை ஒன்றியம், ஜமீன் எளம்பள்ளி ஊராட்சி, மாரப்பம்பாளையத்தில் விளையாட்டுத் திடல் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு, அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலை நாடுகளைவிட, இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில்தான் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் நீரிழிவு நோயால்

2007 ஏப்ரல் 11]

பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த நீரிழிவு நோய்க்கான முதல் காரணமே உடற்பயிற்சி மற்றும் உடல் உழைப்பு இல்லாததுதான் என்று பல ஆய்வுகளில் தெரிவிக்கப்படுகிறது. அந்தவகையிலே, கிராமத்திலே இருக்கின்ற இளைஞர்கள் இந்த அதிநவீனமான அவசரகதியான வாழ்வியல் கொண்ட உலகிலே, உடற்பயிற்சியை மேற்கொள்ளவேண்டும் என்ற அடிப்படையிலேதான், ஊர்தோறும் அல்லது ஊராட்சிதோறும் இதுபோன்ற விளையாட்டுத் திடல் அமைக்க வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தி, அந்த வகையிலே, ஜமீன் எளம்பள்ளி ஊராட்சியிலே இருக்கின்ற மாரப்பம்பாளையத்திலே ஒரு விளையாட்டுத் திடல் அமைத்துத் தர, அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்வாயிலாகத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் விளையாட்டு மைதானம் வேண்டும் என்ற அடிப்படையிலே கேட்டிருக்கிறார். இந்த அரசினுடைய நோக்கம், தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட அளவில் விளையாட்டு அரங்கத்தை ஏற்படுத்திவிட்டு, அதற்குப் பின்னால், ஒவ்வொரு இடத்திலும் அமைப்பதுதான். தேவையிருந்தால், 5 ஏக்கர் இடம் விளையாட்டுத் துறைக்கு அவர்கள் ஒப்படைப்பார்களேயானால், அதனை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன். (குறுக்கீடு). Supplementary question என்றால் கேளுங்கள், Sir.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஏக்கர் நிலம் அளித்தால் ஊராட்சி ஒன்றிய அளவிலோ அல்லது ஊராட்சி அளவிலோ இதுபோன்று விளையாட்டுத் தளம் அமைக்க அரசு முன்வந்துள்ளதற்கு நன்றி கூறி, என்னுடைய பகுதியிலே அதுபோன்று அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: 5 ஏக்கர் இடமும், அரசுக்குச் செலுத்த வேண்டிய அதற்கான தொகையையும் செலுத்தினால், அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது உடற்பயிற்சி மிக அவசியமான ஒன்று. அதனாலே, அரசு அதிக நிதியொதுக்கி, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் அல்லது ஒவ்வொரு நகராட்சிக்கும் நிச்சயமாக ஒரு விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய, சட்டமன்றக் கட்சியினுடைய தலைவரது கோரிக்கைக்கு, தன்னுடைய இளம் வயதிலும் இந்த எண்ணத்தினை அவர் கொண்டிருப்பதற்காக நான் பாராட்டைத் தெரிவித்துக்கொண்டு, (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய அந்த எண்ணத்தை ஈடேற்றுகின்ற வகையில், அவருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

48—

பாதுகாப்பு வேலி

***20897—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—